## பாடம் 12

## நிகழ்த்துதல்-ஓர் அறிமுகம்

### பகுதி-அ

1. ஒரு சில்லுவிலிருந்து வேறொரு சில்லுவிற்கு விரைவாக நகர்த்துவதற்கு இதில் எது பயன்படுகிறது.
ஆ)நேவிகேட்டர்

2. சில்லுக்காட்சியை துவங்குவதற்கான குறுக்குவழி விசை எது?

இ) F5

3. இம்ப்ரெஸ்ல் அனைத்து சில்லுகளின் சிறுபதிப்புகள் கிடைமட்ட வரிசையில் அமைக்கப்பட்டிருக்கும் முறை.

ஈ)Slide Sorter

4. Impress-ல் கொடாநிலை பார்வை அடையாளம் காண பயன்படுவது.

அ) Normal

5. எந்த பட்டிபட்டை சில்லு மாற்ற விரும்பத் தேர்வை கொண்டுள்ளது?

ஆ)View

6. Impress-ல் நிகழ்த்துதல் நீட்டிப்பை(extension) அடையாளம் காணவும்?

அ).odp

7. நிகழ்த்துதல் கருவிகளில், ஒரு சில்லுவின் நுழைவு மற்றொரு சில்லை நிகழ்த்துதலில் மாற்றுகிறது. எந்த தேர்வு இச்செயலை செய்கிறது?

ஆ) Slide Transition

8. வனியா "உலக வெப்பமயமாதல்" என்ற தலைப்பில் ஒரு நிகழ்த்துதலை செய்துள்ளார். அவர் வகுப்பில் இத்தலைப்பு பேசும்போது அவரின் நிகழ்த்துதல் தானாகவே காட்சிப்படுத்தப்பட வேண்டும். எனில்,கீழ்க்காணும் எந்த தேர்வு அவருக்கு பயனுள்ளதாக அமையும்?

ஆ) Rehearse Timing

### பகுதி-ஆ

1. <u>ஒரு சில்லு மற்றும் சில்லுகாட்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன?</u>
   - இம்ப்ரெஸ் பயன்படுத்தி சில்லுகள் உருவாக்க இயலும்,இதில் உரை,ஒளி,ஒளி காட்சிகள் நிழற்படங்கள் போன்ற பல்வேறு ஊடக செய்திகளுடன் வழங்கலாம். எழுத்துப்பிழை திருத்தும் வசதி உள்ளது.

மேலும் முன்னரே தொகுக்கப்பட்ட உரை வடிவம் மற்றும் பின்னணி உடன் இணைய உதவி உள்ளது.

- இவ்வாறு உருவாக்கப்பட்ட சில்லுகளை தொகுத்து வரிசையாக பெரிய திரையில் காட்சிப்படுத்துதலை சில்லுக்காட்சி என்கிறோம்.

2. எத்தனை உள்ளமைந்த சில்லு வடிவமைப்புகள்(layout) Impress-ல் உள்ளன?

   உள்ளமைந்த வடிவமைப்புகள் பல வகைகள் உள்ளன. 12 வகையான வடிவமைப்புகள் Layoutல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. நிகழ்த்துதல் என்றால் என்ன?

   - நிகழ்த்துதல் என்பது, நிகழ்த்துதலை உருவாக்கவும், வினா-விடைகள், மின் கற்றல் மற்றும் பல்லூடக பொருட்களை உருவாக்கவும் பயன்படும மென்பொருள் ஆகும்.

4. Impress-ல் வார்ப்புரு - வரையறு.

   - வார்ப்புரு என்பது முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட சில்லுகளைக் கொண்டு நிகழ்த்துதலை உருவாக்க உதவும், தோன்றும் முன் வடிவமைப்பு செய்யப்பட்ட சில்லுகளின் பட்டியல் ஆகும்.

5. சில்லு வடிவமைப்புகள் என்றால் என்ன?

   ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட (Layouts) பல உள்ளன. அவற்றில் தேவையான ஒன்றை தேர்வு செய்து கொள்ளலாம். அல்லது காலியான புது சில்லுவினை தேர்வு செய்து,அது பணிப்பகுதியில்(Normal View) காணப்படும் அதில் உரை,படங்கள்,ஒளிக்காட்சிகள்,அசைவுப்படங்கள், இணைப்பு மற்றும் ஒலி போன்றவற்றை இணைத்து இறுதி பொருளை உருவாக்குதலை சில்லு வடிவமைப்பு என்கிறோம்.

## பகுதி-இ

1. இம்ரெஸ்ல் எத்தனை வகையான பார்வை காட்சிகள் உள்ளன?

   ஐந்து வகையான பார்வை காட்சிகள் உள்ளன. அவை Normal, Outline, Notes, Handout, Slide Sorter ஆகியன ஆகும்.

2. நிகழ்த்தல் மென்பொருளை யார் பயன்படுத்துகிறார்கள்,ஏன்?

   வினா-விடைகள் தயாரிப்பவர்கள், மின் கற்றலில் ஈடுபடுபவர்கள், பல்லூடகப் பொருட்களை உருவாக்குபவர்கள் நிகழ்த்துதல் மென்பொருளை பயன்படுத்துகிறார்கள்

3. Slide Sorter பார்வை மற்றும் அதன் முக்கியத்துவத்தை வரையறுக்கவும்.

   இது எல்லா சில்லுகளையும் சிறிய வடிவத்தில் பார்க்க உதவுகிறது. சில்லு காட்சியின் நேரத்தை குறிப்பிடவும் இரண்டு சில்லுகளுக்கிடையேயான பரிமாற்றத்தை சேர்க்கவும் பயன்படுகிறது.

4. Normal View என்றால் என்ன? விளக்குக.

   தனித்தனி சில்லுவை உருவாக்கவும் பதிப்பிக்கவும் உதவுகிறது. சில்லுவை வடிவமைக்க, சேர்க்க, வரைகலை படம் மற்றும் அசைவு படங்களை சேர்க்க பயன்படுகிறது.

5. Impress-ல் சிறந்த நிகழ்த்துதலை உருவாக்க சில்லு மாற்று(transition effect) முறை எவ்வாறு உதவுகிறது?

   சில்லு மாற்றல் பட்டியல் No Transition என்ற தேர்வை உள்ளடக்கியுள்ளது. சில்லு மாற்றத்தின் வேகத்தை நாம் தேர்ந்தெடுத்து

கொள்ள முடியும் , மாற்று விளைவு தானாக நிகழ வேண்டுமா? அல்லது பயனாளர் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமா? என தேர்ந்தெடுத்துக் கெள்ளலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட சில்லு எவ்வளவு நேரம் காண்பிக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடலாம்

பகுதி-ஈ

1. வளர்மதியின் ஆசிரியர், OpenOffice Impress-யை பயன்படுத்தி ஒரு நிகழ்த்துதலை உருவாக்கும்படி கூறினார், ஆனால் வளர்மதி இதற்கு முன் எப்போதுமே Impressல் வேலை செய்தது இல்லை , எனவே கீழ்காணும் செயல்களை செய்வதற்கு வளர்மதிக்கு உதவி செய்க.

அ) முதல் சில்லுவை தவிர, எல்லா சில்லுக்கும் ஒரே வடிவமைப்பில் இருக்க வேண்டும். இதற்கு அவர் என்ன செய்ய வேண்டும்?

இரண்டாவது சில்லுவைக் கிளிக் செய்து பின் Shift பொத்தானை அழுத்தி கொண்டு கடைசி சில்லுவைக் கிளிக் செய்ய வேண்டும். இப்போது 2வது சில்லு முதல் கடைசி சில்லு வரை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும். இப்போது Layout பக்கத்திற்கு சென்று தேவையான வடிவமைப்பை தேர்ந்தெடுத்து கொள்ளவும்.

ஆ) பார்வையாளர்கள் எளிதில் தொடர்பு கொள்ள, விளக்கக்காட்சியின் ஒரு வன்படி நகலை அவர்களுக்கு வழங்க வேண்டும், இதை அவர் எதை கொண்டு உருவாக்க வேண்டும்?

Handout View என்பது அச்சிடப்பட வேண்டிய சில்லுகளை வடிவமைப்பதற்காக உதவுகிறது. காட்சிமுறை பொத்தான்களில் உள்ள Handout தத்தலை கிளிக் செய்யவும், பின்னர் பணி பலகத்தில் லேஅவுட் தேர்வை தேர்ந்தெடுக்கவும்

இ) படங்கள் மற்றும் திரைப்பட கோப்புகள் நிகழ்த்தலில் செருக விரும்புகிறார், எப்படி இதை செய்ய முடியும்?

- படங்களை சேர்க்க Insert->Picture->From file என்ற தேர்வின் மூலம் தோன்றும் Insert Picture உரையாடல் பெட்டியில் தேவையான படத்தை தேர்ந்தெடுத்து Open என்ற பொத்தானை கிளின் செய்ய வேண்டும்.
- திரைப்பட கோப்புகளை சேர்க்க Insert->Movie and Sound என்ற தேர்வின் மூலம் தோன்றும் Insert Movie and Sound உரையாடல் பெட்டியில் தேவையான திரைப்பட கோப்பை தேர்ந்தெடுத்து Open என்ற பொத்தானை கிளின் செய்ய வேண்டும்

ஈ) நிகழ்துதலை பார்வையாளர்களுக்கு காண்பிப்பதற்கு மிகவும் பொருத்தமான சில்லு காட்சிமுறையை பரிந்துரைக்கவும்.

நிகழ்துதலை பார்வையாளர்களுக்கு காண்பிப்பதற்கு மிகவும் பொருத்தமான காட்சி முறை நிகழ்த்துதலை துவங்குதல் ஆகும்.

நிகழ்த்துதலை துவங்க

- Slide Show->Slide Show என்ற தேர்வின் மூலம் துவங்கலாம்
- கருவிப்பட்டையில் உள்ள Slide Show குறும்படத்தை கிளிக் செய்து துவங்கலாம்
- F5 அல்லது F9 பொத்தானை அழுத்தியும் துவங்கலாம்

உ) <u>நிகழ்த்துதலை கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்கு , அதில் சில விளைவுகளைச் சேர்க்க விரும்புகிறார், எப்படி அதை செய்ய முடியும்,பரிந்துரை.</u>

சில்லுவில் சேர்க்கப்பட்ட பொருள்களுக்கு அசைவூட்ட விளைவுகளை சேர்க்க வேண்டும்.

- குறிப்பிட்ட சில்லுவை Normal View முறையில் தோன்ற செய்யவும்
- அசைவூட்டம் வழங்கப்பட வேண்டிய பொருளை தேர்வு செய்யவும்
- பணிச்சாளரத்தில் உள்ள Custom Animationதொகுதியை தேர்வு செய்யவும், ADD பொத்தானை கிளிக் செய்து அசைவூட்டங்களை சேர்க்கவும்

2. விற்பனையாளர் தனது தயாரிப்புகளை விருத்திசெய்வதற்கு ஒரு நிகழ்த்துதல் எப்படி உதவி செய்யும்?

- விற்பானையாளர் தனது தயாரிப்புகளை விருத்திசெய்வதற்கு ஒரு பல்லூடகத்தை உருவாக்க வேண்டும்.
- தேவையான சில்லுகளை Insert->Slide என்ற தேர்வின் மூலம் சேர்க்கவும்.
- அதில் விற்பனையாளர் பற்றிய அறிமுகம், தயாரிப்பு பொருளை பற்றிய விளக்கம், மற்றும் படம் ,அதன் விலை, சிறப்பு சலகைகள், அணுக வேண்டிய முகவரி போன்ற விபரங்களுக்கு தனித்தனி சில்லுகளை உருவாக்க வேண்டும்.
- தனித்தனி சில்லுகளுக்கான வடிவமைப்புகளை பெற , குறிப்பிட்ட சில்லுவை கிளிக் செய்து Layout தொகுதியை கிளிக் செய்து தேவையான Layoutஐ தேர்ந்தெடுக்கலாம்.
- ஒவ்வொரு சில்லுவிலும் உரை மற்றும் தேவையான அசைவூட்டங்களை சேர்க்க Normal Viewல் வைத்து உரையினை சேர்க்கலாம். அசைவூட்டங்களை சேர்க்க ஒவ்வொரு சில்லுவிலும் உள்ள பொருட்களை தேர்ந்தெடுத்து Custom Animation என்ற பக்கத்திற்கு சென்று Add பொத்தானை கிளிக் செய்து அசைவூட்ட விளைவுகளை சேர்க்கலாம்.
- சில்லு மாற்றல் விளைவுகளை சேர்க்க குறிப்பிட்ட சில்லுவைத் தேர்ந்தெடுத்து Slide Transition தொகுதிக்கு சென்று சில்லு மாற்றத்தின் வேகம், மாற்று விளைவு தானாக நிகழ வேண்டுமா? அல்லது பயனாளர் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமா? என தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சில்லு எவ்வளவு நேரம் காண்பிக்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிடலாம்.
- இவ்வாறாக உருவாக்கப்பட்ட பல்லூடகத்தை பயனாளர்களுக்கு காட்சிப்படுத்தி காண்பிக்கலாம். அதற்கு Slide Show->Slide Show என்ற தேர்வின் மூலம் துவங்கலாம் அல்லது கருவிப்பட்டையில் உள்ள Slide

www.Padasalai.Net

Show குறும்படத்தை கிளிக் செய்து துவங்கலாம் அல்லது F5 அல்லது F9 பொத்தானை அழுத்தியும் துவங்கலாம்

3. <u>சிவாபாலன் தனது பள்ளியின் வருடாந்திர விழாவில் காண்பிக்க ஒரு நிகழ்த்துதலை உருவாக்கினார், நிகழ்த்துதல் துவங்குவதற்கு 5 நிமிடங்களுக்கு முன், அவர் பள்ளியின் பெயர் தவறு என்பதை கவனித்தார். அது காட்சி 30 சில்லுகளில் தோன்றுகிறது. ஒரே ஒரு மாற்றத்தின் மூலம் அனைத்து சில்லுகளிலும் இந்த தவறை அவர் எவ்வாறு சரி செய்ய முடியும்?</u>

- பணிப்பலகம் ஐந்து பிரிவுகளை கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று முதன்மை பக்கங்கள்(Master Pages) ஆகும்.
- நிகழ்த்துதலின் பக்க அமைவு முதன்மை பக்கத்தை பயன்படுத்தி வரையறுக்கலாம்.
- பணிப்பலகத்தில் உள்ள Master Page தொகுதிக்கு சென்று தவறாக உள்ள பள்ளியின் பெயரை சரி செய்தால் அவை அனைத்து பக்கங்களிலும் சரி செய்யப்படும்

4. <u>முன்வடிவமைத்த படிவங்கள்(Template) பயன்படுத்தலில் சில நன்மைகளை பட்டியலிடு?</u>

- File->New->Presentation என்ற தேர்வின் மூலம் வரக்கூடிய உரையாடல் பெட்டியில் Open existing presentation விருப்பத்தை தேர்வு செய்தால் ஏற்கனவே உருவாக்கிய நிகழ்த்துதலை பயன்படுத்தலாம்.
- ஏற்கனவே உருவாக்கி வைக்கப்பட்டுள்ள நிகழ்த்துதலை திறக்க Open என்ற பொத்தானை கிளிக்செய்தால் ஏற்கனவே உருவாக்கிய நிகழ்த்துதல்கள் பட்டியல் தோன்றும் அதில் இருந்து நமக்கு தேவையானவற்றை தேர்வு செய்து கொள்ளலாம்.
- இதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் சில்லுவை வடிவமைக்க ஏற்படக்கூடிய நேரத்தை சேமிக்கலாம். சில்லுவில் வரவேண்டிய தகவல்களை மற்றும் மாற்றினால் போதும்.
- Open Office Impressஐ பற்றிய முழுமையான அறிவு உருவாக்குபவர்க்கு தேவையில்லை.
- இதனால் அனைவரும் முன்வடிவமைத்த படிவங்களை பயன்படுத்தி சில்லுக்காட்சிக்களை எளிதில் உருவாக்கலாம்

www.Padasalai.Net